3. ஒழுங்குப் பிரச்சினை.

ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவது குறித்த நடைமுறை.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 116 உப விதி 3-ன் கீழ் இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். என்னிடத்தில் ஆங்கிலப் புத்தகம் தான் இருக்கிறது. "A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as to regulate the business of the House and shall raise a question which is within the cognizance of the Speaker." என்று இருக்கிறது. அந்த அடிப்படையிலே நான் இந்த ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்புகிறேன். இந்த அவையிலே என்ன பேசப்படலாம்; எப்படிப் பேசப்பட வேண்டும் என்பதை பேரவை விதி 92 குறிப்பிட்டுச் சொல்கிறது. 92 (3)-லே "Use of offensive expression about the conduct or proceedings of the Parliament or any State Legislature or of the Other House" கூடாது என்றுதான் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படியானால் பார்லிமெண்டிலோ இன்னொரு சட்டசபையிலோ நடைபெற்ற நடவடிக்கைகளைப் பற்றிகூட நாம் இங்கே பேசலாம். ஆனால் புண்படுத்தப்படுகிற வாசகங்களை மட்டும்தான் பயன்படுத்தக் கூடாது என்று இருக்கின்ற காரணத்தினாலே காவிரி நீர்ப் பிரச்சினை மட்டும் அல்ல, தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு மக்கள் அரசு சட்டமன்றத்திலே அதனுடைய பெரும்பான்மையை நிருபிக்க முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறதே அரசியல் சட்டத்திலே அனுமதிக்கக்கூடியது என்பதைப் பற்றியும் பேசுவதற்கு இங்கே உரிமை உண்டு. நீங்கள் அதை அனுமதிக்க வேண்டுமென்று மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

திரு. சா. பீட்டர் அல்போன்ஸ் : தலைவர் அவர்களே, நண்பர் அவர்கள் படித்த விதியைச் சற்று ஆழமாகப் படிக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன். ".........which is within the cognizance of the Speaker". என்று தானே இருக்கின்றதே ஒழிய அகில இந்தியாவிலும் பாராளுமன்றத்திலும் நடக்கக்கூடிய அனைத்து சம்பவங்களைப் பற்றியும் சட்டமன்றத்திலே பேச வேண்டும் என்பதில்லை. மேலும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கர்நாடக முதல்வர் அவர்களுக்கு எழுதிய கடிதங்களைப் பாராளுமன்றத்திலே கூட காதல் கடிதங்கள் என்று குறிப்பிட்டிருந்தார்கள். நாங்கள் கூட கலைஞர் அவர்களின் காதல் வெற்றியடைய வேண்டும் என்று தான் நினைத்தோம். ஆனால் இப்போது அந்தப் பெண் போய் அதைவிட அழகான பெண் வந்திருக்கிறது. ஆகவே அதில் ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. அந்தக் கல்யாணம் வாழ வேண்டும் என்று வாழ்த்தி.... .. (கூச்சல்—குழப்பம்).

1989 ஏப்ரல் 22]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லோரும் உட்காருங்கள். திரு. பீட்டர் ஆல்போன்ஸ் சொன்னதால்—முன்னால் இருந்தது அழகான பெண்ணா, பின்னாலே வந்திருக்கிறது அழகான பெண்ணா என்பதை நாம் ஆர அமர ஆராய்ந்து முடிவு பண்ணுவோம். ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக திரு. வரதராசன் அவர்கள் கூறியதற்கு விடை. பேரவைத் தலைவர் அவருக்குள்ள அதிகாரங்கள் தொடர்பாக — அரசியல் சட்டத்தில் சில பகுதிகள் குறிப்பிடப்படுகின்றன—அரசியல் சட்டத்தில் பேரவைத் தலைவருக்கு அதிகாரங்கள் பற்றி என்னென்ன குறிப்பிடப்படுகின்றனவோ அவை பற்றித்தான் இங்கு விவாதிக்கலாமே தவிர அரசியல் சட்டத்தைப் பற்றியோ அல்லது அரசியல் சட்டம் சார்பாக பிற மாநிலச் செய்திகளையோ விவாதிக்க முடியாது என்பதை திரு. வரதராசன் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். அடுத்து திரு. அப்துல் லத்தீப்.

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) கர்நாடக முதல்வரோடு காவிரி நீர்ப் பிரச்சினை பற்றித் தமிழக முதல்வர் நடத்த இருக்கும் பேச்சு வார்த்தை குறித்து—தொடர்ச்சி.

THIRU M. ABDUL LATHEEF: Honorable Mr. Speaker, Sir, An important pertinent constitutional question has been raised to attract the attention of not only this House but also the public who are concerned with some developments which affect directly the constitutional competence of a House similar to this one. One question that is of direct concern which is within the realm of cognizance by individual as well as all the Members of the House, is the proposed talk between the Honorable Chief Minister of Tamil Nadu and the Honorable Chief Minister of Karnataka. This arrangement was contemplated because a solution to the long pending Cauvery dispute was evading, because of the non-existence of a popular Government or involvement of the officials in the talk. Therefore, it was rightly thought that a direct bilateral talk should be held between the two Chief Ministers. That will have a direct effect and this will have a popular approval of the people of both the States. Therefore, after a long time, we were happy that on the 28th of this month, a solution will be found to the satisfaction and pleasure of the people of Tamil Nadu and to the much relief of the people of Tamil Nadu. Therefore, a question, a pertinent question, that has been raised by the honorable Member Mr. Pon. Vijayaraghavan was in the absense of popular Government, what is the alternative arrangement that the Government of Tamil Nadu is contemplating. That is the question we would like to know and it is our right.

The other question is, a vacuum has been created because of the application of Article 356 of the Constitution. Now Article 356 is an Article that can be used or misused against any State Legislature and